

# தி.மு.க. இளைஞர் அணி

**மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு**

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, கரூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களுக்கு 2 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**09.07.2025 புதன்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10.00 மணி | அரசு ஆய்வுக்கூட்டம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கரூர். |
| காலை 11.30 மணி | மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்துரையாடல் | திருநகர், கரூர். |
| மதியம் 12.30 மணி | ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டம் | பிரேம் மஹால், கரூர். |
| மாலை 5.00 மணி | புதிய பேருந்து நிலையம் திறப்பு | திருமாநிலையூர், கரூர். |
| மாலை 5.15 மணி | அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல். | திருமாநிலையூர், கரூர். |
| மாலை 6.00 மணி | பாக முகவர், பாக உறுப்பினர், பாக டிஜிட்டல் முகவர்கள் ஆலோசனைக் கூட்டம். | தளபதித் திடல், ராயனூர், கரூர். |

**10.07.2025 வியாழக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10.00 மணி | அரசு ஆய்வுக்கூட்டம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல். |
| காலை 11.30 மணி | அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், நாமக்கல். |
| மதியம் 12.00 மணி | கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான கலந்துரையாடல். | ஸ்ரீ மஹால், நாமக்கல். |
| மதியம் 03.00 மணி | விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடல். | மாவட்ட விளையாட்டு வளாகம், நாமக்கல். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 07.07.2025

கலைஞர் 100
1924 - 2023





தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருக்கரங்களால் திறக்கப்படவிருக்கும் திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் அமைந்துவரும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலை அமைப்புப் பணிகளை தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.பார்வையிட்டனர் .

# அரசின் 10 துறைகளின் செயல்பாடுகள் - முதல்வர் ஆய்வு!

சென்னை, ஜுலை 9 – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பத்து துறைகளின் செயல்பாடுகள் குறித்து தொடர் ஆய்வு மேற்கொண்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (7.7.2025) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சி துறை, இயற்கை வளங்கள் துறை, போக்குவரத்துத் துறை, உயர்கல்வித் துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, பள்ளிக்கல்வித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை ஆகிய துறைகளின் செயல்பாடுகள் குறித்து சுமார் நான்கு மணி நேரம் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள், நிலப் பயன்பாட்டு தகவல் அமைப்பு, நீடித்த நிலையான சுரங்க கொள்கையை உருவாக்கும் பணிகள், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களின் செயல்பாட்டுத் திறன், சேவை வழங்கல் மற்றும் நிதி நிலையை மேம்படுத்தும் திட்டம், சமூக நீதி விடுதிகளின் செயல்பாடுகள், 6 முதல் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அடிப்படைக் கணினி அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் திறன் வளர்க்கும் திட்டம், அமைப்புசார நலவாரியங்களில் பதிவுபெற்ற தொழிலாளர்களுக்கு ஸ்மார்ட் கார்டு வழங்குவது, ஆதி திராவிட, பழங்குடியின தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் திட்டத்தின் செயல்பாடுகள், புதிதாக உருவாக்கப்பட்ட 6 மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வரும் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் கட்டுமானப் பணிகள் போன்ற பல்வேறு துறைகளின் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டு, விவரங்களை கேட்டறிந்தார்.

துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் பணிகள் அனைத்தையும் உரிய காலத்திற்குள் விரைவாக முடித்திட உயர் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன் உள்ளிட்ட அரசுத் துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# குழந்தை தமிழரசன்

**ஜுலை 9 (2020)**



**மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**கல்லூரி மாணவர் பேரவை தலைவராகவும், தலைமைக் கழகப் பேச்சாளராகவும் விளங்கியதோடு, பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், தணிக்கைக் குழு உறுப்பினர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர், தீர்மானக்குழுச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**1996ல் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



# தி.மு.க. இளைஞர் அணி



**தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், கல்வி, மருத்துவ உதவித் தொகை மற்றும் பொற்கிழியாக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 20 பேருக்கு**

**கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ரூ.5,00,000/– வழங்கினார்.**

கழகத் தலைவர் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது வழிகாட்டுதலின்படி, தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளையில் இருந்து, பொதுமக்களுக்கு கல்வி, மருத்துவ உதவிகள் மற்றும் கழக முன்னோடிகளுக்கான பொற்கிழியாக ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 ஆயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வு செய்து, இந்த நிதி உதவிகளை வழங்கி வருகிறார், மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

மே மாதத்திற்கான நிதி உதவிகளைப் பெறும் 20 பயனாளிகளின் விவரம் வருமாறு :

| வ. எண் | பெயர், முகவரி |
|---|---|
| 1 | ஜெ.தனுஷ், த/பெ ஜெயசந்திரன், 5/12, சவுத் லாக் ரோடு, எண்ணூர், சென்னை – 600 057. |
| 2 | பா.ஸஷ்விகா, த/பெ பாலசுப்பிரமணி, 30/49, வரதன் வீதி, கோபிச்செட்டிப்பாளையம், ஈரோடு – 638 452. |
| 3 | கோ.சூர்யகுமாரி, க/பெ கோபிநாத், 6/49, துர்கா தேவி நகர், அயப்பாக்கம், திருவள்ளூர் – 600 077. |
| 4 | க.கீதாஞ்சலி, த/பெ கருப்புசாமி, 4/311, சந்தவநாயக்கன்பாளையம், காட்டூர், பொங்கலூர், திருப்பூர் – 641 667. |
| 5 | ப.இராஜேந்திரன், த/பெ பழனிவேல், 2/3 தெற்கு வீதி, தலைஞாயிறு, நாகப்பட்டினம் – 614 712. |
| 6 | எஸ்.கே.பாலசுப்பிரமணி, த/பெ கணபதியாபிள்ளை, 23, சண்முகசுந்தராபுரம், போடிநாயக்கனூர், தேனி – 625 513. |
| 7 | வை.கவினிதா, க/பெ வைத்தீஸ்வரன், 6/97, அண்ணா நகர், பொம்மம்பட்டி, நாமக்கல் – 637 212. |
| 8 | க.பாரதி, த/பெ கஜேந்திரபாபு, 8/24, சுப்பிரமணியர் கோயில் தெரு, ராஜாஜி நகர், பல்லாவரம், காஞ்சிபுரம் – 600 043. |
| 9 | ஆ.ஜெய் ஸ்ரீநிவாஸ், த/பெ ஆறுமுகம், 30, முருகப்பா நகர், திருத்தணி, திருவள்ளூர் – 631 209. |
| 10 | ஹ.அஸ்ரா ஹானியாஹ், த/பெ ஹயாத் பாஷா, 43, நல்லப்ப வாத்தியார் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021. |
| 11 | ந.கரிஷ்மா, த/பெ நடராசன், 181, எல்.பி.எஸ். தெரு, சிவகிரி, ஈரோடு – 638 109. |
| 12 | ஆ.அஸ்வின், த/பெ ஆனந்தன், 1/87, பிள்ளையார் கோயில் தெரு, 47, தென்பாதி, சோழபாண்டி, மன்னார்குடி, திருவாரூர் – 614 016. |
| 13 | பா.தங்கசாமி, த/பெ பால்சாமி, 45, ஜமீன்சத்திரத் தெரு, மண்டபம், இராமநாதபுரம் – 623 518. |
| 14 | கா.வேளாங்கண்ணி, க/பெ கார்த்திகேயன், 58, தம்பிரான் குடியிருப்பு, வடக்குத் தெரு, வீரவநல்லூர், திருநெல்வேலி – 627 426. |
| 15 | மு.உமைஸ் பர்வீன், க/பெ முஹம்மது பிலால், 13/395, மேட்டாங்காடு, விநாயகர் கோயில் அருகில், மதுக்கரை, கோயம்புத்தூர் – 641 105. |
| 16 | க.சந்திரன், த/பெ கந்தசாமி, 24/1, கோட்டைத் தெரு, திருப்பரங்குன்றம், மதுரை – 625 005. |
| 17 | கா.ரோச்சனா பானு, த/பெ கார்த்திக், 8/35, கவரைத் தெரு, வடபழனி, சென்னை – 600 026. |
| 18 | பூ.அபிநயஸ்ரீ, த/பெ பூராமகதிரேசன், 2/93, கிழக்குத் தெரு, ஊர்மேழகியான், கடையநல்லூர், தென்காசி – 627 852. |
| 19 | மா.சண்முகம், த/பெ மாரி, புரான்சாமேடு, ஹக்கீம் கல்லூரி எதிரில், மேல்விசாரம், இராணிப்பேட்டை – 632 509. |
| 20 | சு.ஓவியா, க/பெ சுகுமார், 30–டி, வண்டிக்காரத் தெரு, திருவாரூர் – 610 001. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 07.07.2025

கலைஞர் 100
1924 - 2023